2nd November 1966]

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (a) & (b) A statement [a] is placed on the Table of the House.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தென் ஆற்காடு மாவட்டத்தில் 17 இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் இல்லை என்று கணக்கு கொடுத்திருக்கிறார்கள். மற்ற மாவட்டங்களில் இப்படி இருக்காது என்று நினைக்கிறேன். தென் ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்த வரையில் ஏன் இந்த நிலைமை வந்தது ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : 17-ல் இப்போது ஆறு சென்டர்கள் திறக்க அரசாங்கம் உத்தரவு பிறப்பித்திருக்கிறது.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : ஆறு என்று கணக்கு கொடுத்திருக்கிறார்கள். இந்த ஆறுக்கே கோர்ட் வரை வழக்காடுகிற நிலைமை வந்திருப்பதற்குக் காரணம் என்ன ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : கோர்ட் வரையில் வழக்கு ஒன்றும் வந்ததாகத் தகவல் இல்லை. ஆனால், இதில் பஞ்சாயத்து யூனியன்களுக்கும், அந்தந்த மாவட்டத்தைச் சார்ந்த அங்கத்தினர்களுக்கும்--அவர்களிடையே டிஃப்பரன்ஸ் ஆஃப் ஒப்பினியன் காரணமாக இது தாமதமாகிறதே தவிர கோர்ட்டுக்குப் போனது எதுவும் காரணம் அல்ல.

* 333 **கேள்வி.—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1964-ல் வட கடலூர் அபிவிருத்தி மன்றத்தில் மரக்காணம் யூனியனுக்கு ஆரம்ப சுகாதார நிலையம் புதிதாக கட்டாவிட்டாலும், பழைய கட்டடத்திலேயே திறப்பதற்கு அனுமதிக்கலாமென்று தீர்மானம் போட்டு அரசாங்கத்திற்கு அனுப்பி இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகியும் அமல் நடத்தாததற்குக் காரணம் என்ன ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : மரக்காணத்தில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தை திறக்கவும், அந்த நிலையத்திற்கு வேண்டிய சிப்பந்திகளை நியமித்துக் கொள்ளவும் அரசாங்கம் ஏற்கெனவே உத்தரவு பிறப்பித்து உள்ளது.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : மரக்காணத்திலே ப்ரைமரி ஹெல்த் சென்டரை, கட்டடம் இல்லாவிட்டாலும் பொதுக் கட்டடம் இருந்தால் அங்கு வைத்துக் கொள்ளலாம் என்று உத்தரவு பிறப்பித்து விட்டோம் என்று சொல்கிறார்கள். நடக்கிறது ஏற்கனவேயிருந்த சர்க்கார் டிஸ்பன்ஸரிதான் இருக்க வேண்டும், ப்ரைமரி ஹெல்த் சென்டர் இருக்கக்கூடாது என்று இப்பொழுது பல தகராறுகளும், தொந்தரவுகளும் நடந்து கொண்டிருக்கிறதே, அது அமைச்சர் பார்வைக்கு வந்ததா ? என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டார்கள் ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அந்த டிஸ்பன்ஸரியை ப்ரைமரி ஹெல்த் சென்டராக கன்வர்ட் செய்வதில் வரக்கூடிய தகராறு காரணமாக பிரதம சுகாதார நிலையம் திறப்பதற்கு

---

[a] Printed as Appendix V on page 103–105.

இப்போது தாமதம் ஏற்பட்டிருக்கிறது. மரக்காணத்தில் சில ஆண்டுகளாக கேட்டுக்கொண்டிருந்ததன் காரணமாக இப்போது ஓரளவு ஒப்புக்கொண்டு புதுக் கட்டடம் வருவது வரை அங்கேயே நடத்திக் கொண்டு வரலாம் என்று உத்திரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

* 334 கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு } திரு. எ. சுவாமிதாஸ் } கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழகத்தில் எத்தனை ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்றன?

(இ) டாக்டர்கள் இல்லாத ஆரம்ப சுகாதார நிலையங்கள் எத்தனை ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) & (இ) இந்த மாநிலத்தில் 1—7—1966-ல் உள்ளபடி, 203 ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளன. அவைகளில் 18 நிலையங்களில் டாக்டர்களை நியமித்திருந்தும், 25 நிலையங்களில் டாக்டர்கள் இல்லை.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: இருபத்தைந்து நிலையங்களில் டாக்டர்கள் இல்லை என்று சொல்கிறார்கள். டாக்டர்கள் இல்லாத நிலையங்களில் எல்லாம் எப்படி நிர்வாகம் நடத்தப்பட்டு வருகிறது ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: டாக்டர்கள் இல்லாத நிலையங்களில் எல்லாம் பக்கத்திலுள்ள ப்ளாக்கிலிருந்து டாக்டர் வந்து அப்போதைக்கப்போது அடிஷனல் சார்ஜாக இருக்கிறார்.

*335 கேள்வி.—திரு. பி. முருகையன்: கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1965 ஏப்ரல் 14-ல் சுகாதார பிரிவில் இருந்து கரம்பக்குடியில் உள்ள சர்க்கார் டிஸ்பென்சரியை ஆரம்பச் சுகாதார நிலையமாக மாற்றுவதற்கான உத்திரவு ஏற்கெனவே பிறப்பித்துவிடப்பட்டுவிட்டது என்ற வந்த உத்திரவை அமல்படுத்தாததற்குக் காரணம் என்ன ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: A statement [a] is placed on the Table of the House.

*336 கேள்வி.—திரு. பி. முருகையன்: கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், இலுப்பூரில் உள்ள டிஸ்பென்சரியை ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றவேண்டி, அப்பகுதி பொது மக்களிடமிருந்து அரசாங்கத்திற்கு அண்மையில் கோரிக்கைகள் வந்தனவா ?

---

a Printed as Appendix VI on pages 105.